திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இதற்கு முன்னால் பொதுத் தகுதி 'பர்ஸ்ட் பார்ம்' என்றும், 5 ஆண்டுகள் அவர்களுக்கு 'ஒர்க்ஷாப் எக்ஸ்பீரியன்ஸ்' இருந்தால் போதும் என்றும்தான் இருக்கின்றது. இப்போது எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும் படித்துவிட்டு இரண்டு ஆண்டுகள் ஐ.டி.ஐ.-ல் படித்துவிட்டு அவர்கள் அங்கு கொடுக்கக்கூடிய கிராப்ட்ஸ்மன் சர்டிபிகேட் பெறுகிறார்கள். நாம் விதித்திருக்கும் விதி அந்த விதியைவிட எந்தவிதத்திலும் குறைவானதல்ல என்பதை அரசு மனதில் கொண்டு சீக்கிரம் முடிவு எடுத்தால், ஐ.டி.ஐ. படித்து வெளியேறும் பல மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு இடமிருக்கும் என்பதை அரசு ஏற்றுக்கொள்ளுகின்றதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விரைவிலே முடிவு காண்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.

Engineering Instructors in High Schools

* 332 *Q.*—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any special pay was paid to Engineering Instructors in High Schools up to 2nd October 1970;

(*b*) whether it is being continued thereafter ;

(*c*) if not, the reasons therefor ;

(*d*) whether it was taken into account while refixing their salaries after 2nd October 1970; and

(*e*) if not, the reasons therefor ?

உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பொறியியல் ஆசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பொறியியல் ஆசிரியர்களுக்கு 2—10—1970 வரையில் சிறப்புச் சம்பளம் ஏதேனும் வழங்கப்பட்டதா ?

(இ) அந்த சிறப்புச் சம்பளம் 2—10—1970-க்குப் பின்னரும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறதா ?

1973 ஏப்ரல் 3]

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(எ) 2—10—1970-க்கு பின்னர் அவர்களுடைய ஊதியங்களைத் மாற்றியமைத்தபோது, அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதா ?

(ஐ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். முதுநிலைப் பொறியியல் ஆசிரியர்களுக்கு ரூ. 35-ம் இளநிலை பொறியியல் ஆசிரியர்களுக்கு ரூ. 25-ம் தனிச் சம்பளம் அளிக்கப்பட்டு வந்தது.

(இ) இல்லை.

(உ) திருத்தப்பட்ட சம்பள விகிதம், முந்திய சம்பள விகிதத்தையும் தனிச் சம்பளத்தையும் கணக்கில் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டதால் 2—10—1970 முதல் தனிச் சம்பளம் கொடுக்கக்கூடாது என உத்தரவு இடப்பட்டது.

(எ) இல்லை. இருப்பினும் தனிச்சம்பளத்தை சம்பள நிர்ணயம் செய்யும் போது கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்று அரசு 26—2—73-ல் உத்தரவிட்டுள்ளது.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லை.

Engineering Sections in Secondary Schools

* 333 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have ordered the continuance in service of all unqualified Senior and Junior Mechanics serving in the Engineering Sections in Secondary Schools ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the qualifications which the Government propose to prescribe for them ?

உயர்நிலைப் பள்ளிகளின் பொறியியல் பிரிவுகள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளின் பொறியியல் பிரிவுகளில் பணியாற்றும் தகுதி பெறாத முதுநிலை, இளநிலை கம்மியர் (Mechanics) அனைவரையும் தொடர்ந்து பணியில் வைத்துக்கொள்வதற்கான ஆணை எதையேனும் அரசு பிறப்பித்துள்ளதா ?